## சார்பு நீதிமன்றம், சங்ககிரி

முன்னிலை: **திரு. இ. இராஜேந்திர கண்ணன், எம்.ஏ.,எம்.எல்.,**
சார்பு நீதிபதி, சங்ககிரி

திருவள்ளுவராண்டு 2048, ஹேவிளம்பி வருடம், தை திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை
2018 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ம் நாள் புதன்கிழமை

**H.M.O.P**.52/2015

கந்தசாமி ..மனுதாரர்

**/எதிராக/**

மலர்விழி ..எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று 24.1.2018 ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்கள். எம். பி. பழனிசாமி, எஸ். தர்மேந்திரா ஆகியோர்களும், எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரையினை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.6.2002 அன்று நடந்த திருமணத்தின் படி எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவிடுமாறு இந்து திருமணச்சட்டப்பிரிவு 9-ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனு சுருக்கம்:**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே 13.6.2002 ம் தேதி இளம்பிள்ளையில் உள்ள ஸ்ரீ குருநாதசுவாமி கோவில் தேவாங்க மகாஜன கல்யாண மண்டபத்தில் சாதி குல வழக்கப்படி பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் பயனாக 3 குழந்தைகள் பிறந்துள்ளது. மனுதாரர் எதிர்மனுதாரர் மற்றும் குழந்தைகளுடன் சந்தோசமாக குடும்பம் நடத்தி வந்தார். மனுதாரர் அவரது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு போதுமான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்தார். மனுதாரர் தான் சம்பாதித்த பணத்தைக் கொண்டு எதிர்மனுதாரர் பெயரில் 7.7.2008 மற்றும் 3.9.2012 ம் தேதிகளில் இடங்கணசாலை கிராமத்தில் நிலங்கள் வாங்கியிருந்தார். மனுதாரர் அவரது வருமானத்தைக் கொண்டு குழந்தைகளை தனியார் பள்ளியில் படிக்க வைத்து வந்தார். இந்த நிலையில் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் பேச்சை கேட்டுக் கொண்டு எதிர்மனுதாரர் பெயரில் வாங்கியிருந்த நிலத்தை மனுதாரருக்கு தெரியாமல் விற்று அந்தத் தொகையை எதிர்மனுதாரர் அவரது பெற்றோருக்கு கொடுத்து விட்டார். எதிர்மனுதாரரிடம் இதுபற்றி கேட்டபோது எந்த முகாந்திரமும் இல்லாமல் மனுதாரரிடம் சண்டை செய்து கொண்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவரது பெற்றோர் வீடான சென்னை திருவாண்மியூருக்கு 2012 டிசம்பர் முதல் வாரத்தில் சென்று விட்டார். மனுதாரர் எதிர்மனுதாரரை சமாதானம் செய்து அழைத்து வர சென்றபோது மனுதாரரிடம் பேசவில்லை. குழந்தைகளையும் பார்க்க அனுமதிக்கவிலலை. எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மனுதாரரை

அடித்து வீட்டிற்கு வந்தால் தொலைத்து விடுவோம் என தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தி விரட்டி விட்டார்கள். மேலும் மனுதாரர் மீது திருவாண்மியூர் காவல் நிலையத்தில் 13.1.2013 ம் தேதி புகார் கொடுத்து அதன் பேரில் அழைத்து பேசியதில் எதிர்மனுதாரர் பெற்றோர் மீது தவறு உள்ளது என்று கூறி அவர்களை எச்சரித்து அனுப்பி வைத்தார்கள். காவல் நிலையத்தில் மனுதாரரிடம் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு சொல்லி அனுப்பி வைத்தார்கள். பின்னிட்டு எதிர்மனுதாரர் பொய்யான சங்கதிகளை கூறி சைதாப்பேட்டை மெட்ரோபாலிடன் நீதிமன்றத்தில் பெண்கள் வன்கொடுமை சட்டத்தின்படி மனு தாக்கல் செய்து அந்த மனு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர், மனைவி மற்றும் குழந்தைகள் மீது அன்பும் பாசமும் வைத்துள்ளதால் அவர்களுடன் சேர்ந்து வாழ விரும்புவதால் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்தின் மூலமும், தபால் மூலமும் அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிர்மனுதாரர் அதை வாங்க மறுத்து விட்டார். எனவே எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரர் வருகையிலா எதிரவர் ஆகியுள்ளார்.

4. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்-**

மனுவில் கோரப்பட்டுள்ளவாறு எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்திரவிடக் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. மனுதாரர் தரப்பில் ம.சா.1 விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், உள்ளது. ம.சா.1 வுடன் மனுதாரர் தரப்பு சாட்சி முடித்துக் கொள்ளப்பட்டது. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு:-**

மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டிருக்கிறார். தன் தரப்பு விசாரணையை விரிவாக துலக்கி தன் முதல் விசாரணையாக பிரமாண வாக்குமூலத்தை சமர்பித்திருக்கிறார். இவர் தனது மனுவில் உள்ள விபரங்களை தழுவி சாட்சியம் அளித்திருக்கிறார். இந்த மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. எதிர்மனுதாரர், மனுதாரர் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் சென்னை சைதாபேட்டை 18 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் சார்வு நகல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்திருக்கிறார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணத்தின் போது எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் இரண்டு ம.சா.ஆ.3 வரிசையாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ இயலாது என்று சொல்லி, தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், தான் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் எதிர்மனுதாரர் தன்னுடன் சேர்ந்து வாழ மறுப்பதாகவும், மனுதாரர் மனைவி, குழந்தைகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்

6) எதிர்மனுதாரர் மனுதாரரை மதிக்காமல் நடந்து கொண்டதாகவும், திருமண வாழ்வில் நாட்டமில்லாமல் தன் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ

மறுத்து விட்டதாகவும் மனுதாரர் தெரிவித்திருக்கிறார். எதிர்மனுதாரர் இந்த சாட்சியத்தை முரண்படுத்த தவறிவிட்டார். இந்த சாட்சியம் இறுதி நிலையை அடைந்து விட்டது.

மேலும், எதிர்மனுதாரர் மனுதாரர் மீது பொய்யான தகவல்களை கூறி திருவாண்மியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாலும், எதிர்மனுதாரர், மனுதாரர் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் சென்னை சைதாபேட்டை 18 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தாலும், அதையும் மன்னித்து தன்னுடன் வாழ வருமாறு அழைத்ததற்கு வர மறுத்து விட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். இக்கூற்றினை எதிர்வாதம் செய்ய எதிர்மனுதாரர் நீதிமன்றத்திற்கு வருகை தரவில்லை. எனவே எதிர்மனுதாரருக்கு இந்த கூற்றில் அவர் தரப்பில் கூற எவ்வித விளக்கமும் இல்லை என தெளிவாக தெரிகிறது. திருமணமான கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து, அன்புடனும், ஆதரவுடனும் வாழ்வது மிக முக்கியமான ஒன்றாகும். எனவே இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. இந்த எதிர்மனுதாரர் இவ்வுத்தரவு நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தனது குடும்ப வீட்டிற்கு வந்து, மனுதாரருடன் சேர்ந்து கணவன் மனைவியாக இல்வாழ்க்கை நடத்த வேண்டுமென்றும், அவ்வாறு இருவரும் சேர்ந்து வாழ துவங்கும் காலத்தில், ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி எவ்வித பிரச்சினையும் இன்றி அமைதியாகவும், சந்தோசமாகவும், குடித்தனம் நடத்த வேண்டுமென்றும், இந்த மனுதாரர் எதிர்மனுதாரரை நல்ல முறையில் அன்பு செலுத்தி பராமரிக்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவு தொகையை பற்றிய உத்தரவில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2018 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) இ.இராஜேந்திரகண்ணன்,
**சார்பு நீதிபதி,**
**சங்ககிரி**

**மனுதாரர் தரப்பு சாட்சிப்பட்டியல்:-**

ம.சா.1 .. திரு. கந்தசாமி

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல்:- இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணப்பட்டியல்:-**

ம.சா.ஆ.1 .. திருமண அழைப்பிதழ்

ம.சா.ஆ.2 .. எதிர்மனுதாரர், மனுதாரர் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் சென்னை சைதாபேட்டை 18 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு எண். 432/2013 சார்பு நகல்

ம.சா.ஆ.3 .. திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் (2 எண்ணிக்கை)

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல்: -** எதுவுமில்லை

(ஒம்) இ.இராஜேந்திரகண்ணன்,
**சார்பு நீதிபதி,**
**சங்ககிரி**